بسم الله الرحمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஸனாயிய்யா, ஜித்தா, சவூதி அரேபியா. இதழ் 6:3 துல்ஹஜ், 1430, பக்கங்கள்=12

P.O.Box-32628, Jeddah-21438, K.S.A, Email: suvanam@gmail.com, www.suvanam.com

# கிரிக்கெட்

- *M. அன்வர்தீன் – கப்ஜி – சவூதி அரேபியா*

## சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சி போட்டியில் (ஹிஜ்ரி 1430) முதல் பரிசு பெற்ற கட்டுரை

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டிலே, மக்களால் குறிப்பாக இளைஞர்களால் அதிகமாக உச்சரிக்கப்படுகிற ஐந்து எழுத்து மந்திரச் சொல் எது என்று கேட்டால், கிரிக்கெட் என்று அடுத்த வினாடியே சொல்லிவிடுவார்கள். கிரிக்கெட் சம்பந்தமாக எழுதப்படாத பத்திரிக்கைகள், காட்டப்படாத தொலைக்காட்சிகள், சொல்லப்படாத வானொலிகள் பாவம் செய்தவையாக மக்களால் எண்ணப்படுகின்றன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை வயது வித்தியாசமின்றி, சாதி மத பேதமின்றி ஒன்றை ரசிக்கிறார்கள் என்றால் அது கிரிக்கெட் ஒன்றாகத்தான் இருக்கும். நாட்டு நடப்புகள் உலக விஷயங்கள் அரசியல் மற்றும் இஸ்லாம் பற்றிய விபரங்கள் பற்றி தெரியவில்லையா பரவாயில்லை! ஆனால் கிரிக்கெட் பற்றி புள்ளி விபரங்கள் ஒருவருக்குத் தெரியவில்லையெனில் அவர் அறிவீனராக கருதப்படுகிறார். அந்த அளவிற்கு கிரிக்கெட் எனும் போதை தலைவிரித்தாடுகிறது.

இப்படிப்பட்ட அதி முக்கியத்துவம்? வாய்ந்த கிரிக்கெட்டைப் பற்றி இஸ்லாமியப் பார்வை என்ன என்று ஆதாரத்துடன் பார்ப்போம். முதலில் இஸ்லாம் ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள எந்த ஒரு விளையாட்டுக்கும் எதிரி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவித்தார்கள் அபிசீனியர்கள் நபி(ஸல்) அவர்கள் முன்னே தங்கள் ஈட்டிகளால் விளையாடிக் கொண்டிருந்தார்கள் அப்போது உமர்(ரலி) அவர்கள் வந்து (கோபமடைந்து) குனிந்து சிறு கற்களை எடுத்து அவற்றால் அவர்களை அடித்தார்கள் நபி(ஸல்) அவர்கள் உமரே! அவர்களை விட்டுவிடுங்கள் என்று கூறினார்கள் (புஹாரி: பாகம் 3, அத்தியாயம் 56, எண்: 2901)

ஆனால் எந்த வித பலனுமில்லாத நேரத்தை வீணடிக்கிற, அறிவுக்கு சம்பந்தமில்லாத, சூதாட்டத்தை ஊக்குவிக்கிற, நாட்டின் முன்னேற்றப்பாதையில் வளர்ச்சியில் தடை போடுகிற, ஆபாசத்தை தூண்டுகிற (Cheer Girls), ஆரோக்கியத்துக்கு அப்பாற்பட்ட எந்த ஒரு விளையாட்டையும் இஸ்லாம் ஒரு போதும் ஆதரிக்கவில்லை. ஆங்கிலேயர்களால் திட்டமிட்டு விட்டுச் செல்லப்பட்ட ஆபத்துதான் இந்த கிரிக்கெட் என்று சொன்னால் மிகையாகாது. கிரிக்கெட் எனும் மாயப்பேயினால் நிகழக்கூடிய ஆபத்துக்களை ஆதாரத்துடன் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

### தொழுகையை விடக்கூடிய நிலை:

கிரிக்கெட் விளையாடக்கூடிய, பார்க்கக்கூடிய ஒருவர், (அது பகல் ஆட்டமாகவோ அல்லது இரவு ஆட்டமாக இருந்தாலும் சரியே) தொழுகையை விடுபவராக இருக்கிறார். கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒரு முஸ்லிம் ஐந்து நேரத் தொழுகையை கண்டிப்பாக ஜமாஅத்தோடு தொழக் கூடியவராக இருக்க முடியாது.

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் மறுமையில் ஒரு மனிதனின் அமல்களைப் பற்றி விசாரிக்கப்படும்போது தொழுகையைப் பற்றித்தான் முதன்முதலாக விசாரிக்கப்படும் (அபூதாவூது)

தொழுகையை விட்டுவிட்டு கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டு இருக்கும் ஒருவர் மறுமையில் அல்லாஹ்வின் முன்னிலையில் இந்த

*தொடர்ச்சி 7 ம் பக்கம் பார்க்க ...*

## உள்ளே!

இஸ்லாத்தில் திருமணம் - 3
பரிசளிப்பு நிகழ்ச்சி - 5
துல்ஹஜ் மாத சிறப்புகள் - 6
இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் - 9
பரிசை வென்றவர்கள் விபரம் - 11
இறை நினைவுகள் - 12
அறிவுப் போட்டி - 12

# விடுப்பில் தாய்நாடு சென்று திரும்புவோர் கவனத்திற்கு...

- *ஹாஜா முஹ்யுத்தீன்*

சவூதி வாழ் வெளிநாட்டினரின் பணம், பொருள்கள், உடமைகள் மற்றும் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய விபரீதமான செயல்களை ஒரு பெருந் திருடர்கள் கூட்டம் சவூதி அரேபியா முழுவதிலும் தங்கள் திறமையை நிருபிக்கும் வண்ணம் பல இடங்களில் நிறைவேற்றி வருகின்றனர். அதனை திருடர்கள் ஜாக்கிரதை என்ற பெயரில் ஹிஜ்ரி 1428 துல்கஃதா மாதம் வெளியான சுவனப்பாதை மாதஇதழில் வெளிநாட்டினர் அனைவரும் விழிப்புணர்வுடன் இருப்பதுடன் தன்னை சார்ந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இச்செய்தியை எடுத்து கூறி தன்னை பாதுகாத்து

கொள்ளவும் மேலும் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள அறிவுறுத்தப்பட்டது.

அதன் தொடராக தற்பொழுது நடந்து வரும் வழிப்பறி கொள்ளை சம்பந்தமாக சுவாரஸ்யமான ஒரு உண்மை சம்பவத்தின் மூலம் விளக்கி இனிவரும் காலங்களில் அவரவர் விழிப்புணர்வுடன் நடந்து தன்னுடைய பொருள்களையும் உயிருக்கு அச்சமூட்டக்கூடிய வகையில் நிகழக்கூடிய சம்பவங்களையும் தவிர்ந்து வாழ அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக ஆமீன்!

ஈதுல் பித்ர் என்றழைக்கப்படும் ரமளான் பெருநாளை தாய்நாட்டில் உள்ள தன் குடும்பத்தாருடன் கொண்டாட புறப்பட்டு சென்று, பெருநாளை நல்லபடியாக மகிழ்ச்சியாக கொண்டாடிவிட்டு வயிற்றுபிழைப்புக்காக திரும்பி வந்த நம் தமிழ் பேசும் சகோதரருக்கு ஏற்பட்ட துயர சம்பவம்தான் இது.

விடுப்பில் சென்று திரும்புகின்ற அந்த சகோதரர் புதிதாக ஜித்தாவிற்கு வரக்கூடியவரோ அல்லது முன்பின் அனுபவமில்லாதவரோ அல்லது தனக்கென்று உறவினர்கள் மற்றும் நண்பர்கள் பலர் இல்லாதவரோ கிடையாது.

விமானம் ஜித்தாவிற்கு நள்ளிரவு 12 மணி அளவில் வந்துள்ளது, தான் வந்து சேரவேண்டிய இடத்திற்கு (அறைக்கு) எந்தவித முன்னேற்பாடும் செய்யாமல் அதாவது யாரையும் விமான நிலையத்திற்கு தன்னை அழைத்து வருவதற்காக வரசொல்லாமல், தான் ஜித்தா விமான நிலையம் வந்தவுடன் தனியார் வாகன ஓட்டியிடம் வண்டி வாடகை முதலியவற்றை பேசிக் கொண்டு கார் புறப்பட்டுள்ளது.

வரும் வழியிலேயே பேசிய வண்டி வாடகையை ஓட்டுனர் (சவூதி நாட்டவர்) வாங்கி கொண்டார் மேலும் தன்னுடைய பொபைல் போனில் போதிய தொகையில்லை என் நண்பருடன் பேச வேண்டும் ஆகையால் இந்த நம்பருடன் தொடர்பு கொண்டு என் நண்பருடன் பேசவேண்டும் என்று சொன்னவுடன் சொல்லப்பட்ட நம்பருக்கு அழைத்துள்ளார் ஆனால் அந்த மொபைல் ஆப் செய்யப்பட்டுள்ளது, ஒன்றிற்கு மூன்று முறை முயற்சி செய்துள்ளார் ஆப் செய்த நிலையிலேயே போன் இருந்ததால் பேசஇயலவில்லை, இதற்கிடையில் தான் இறங்கவேண்டிய இடமும் வந்து விட்டது.

தான் இறங்க வேண்டிய இடம் வந்தவுடன் காரை விட்டு இறங்கியதுதான் தாமதம் கார் பறந்து விட்டது தன்னுடன் கொண்டு வந்த எந்த பொருள்களையும் எடுப்பதற்கு அவகாசம் கொடுக்கவில்லை அந்த காரின் ஓட்டுனர், என்ன செய்ய ஒட்டு மொத்த பொருள்களையும் இழந்துவிட்டார்.

தான் காரில் வரும்பொழுது ஓட்டுனர் ஒரு நம்பருக்கு தொடர்பு கொள்ள சொன்னார் அல்லவா அந்த ஞாபகம் திரும்பவே, அந்த நம்பருக்கு தொடர்பு கொண்டால் மறுமுனையில் ஓர் ஆணின் குரல் கேட்டது. அந்நபரிடம், தனக்கு நடந்ததை அனைத்தையும் இவ்வாறு இவ்வாறாக நடந்தது என்று எடுத்துக் கூறி உன்னுடைய நண்பர்தான் அந்த ஓட்டுனர் அவரிடம் பேசி என்னுடைய பொருட்களை திரும்பி வாங்கி தரும்படி கேட்டுள்ளார் நம் சகோதரர். முதலில் மலுப்பலாக பதிலளித்தவர் முயற்சி செய்து பார்க்கிறேன் தகவல் கிடைத்தால் தெரியபடுத்துகிறேன் என்று கூறி இணைப்பை துண்டித்துவிட்டார்.

**குறிப்பு:** ஓட்டுனர் ஒரு மொபைலுடன் பேச வேண்டும் என்று சொன்ன காரணம் புரிகிறதா? திட்டமிட்ட சதி. அதாவது, நம் சகோதரரின் போன் நம்பரை தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக. நாமாக தொடர்பு கொள்ளவில்லையென்றாலும் பதிவான நம் நம்பருக்கு திரும்ப கூப்பிட்டு பேரம் பேசத்தான். (ஆப் செய்து இருக்கும் பொழுது நம் நம்பர் எப்படி பதிவாகும் என தோன்றலாம், மௌஜூத் சர்வீஸின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்)

முதல் அழைப்பு கிடைத்த அடுத்த ஒரு சில மணிகளுக்கு பிறகு அடுத்தடுத்து அந்த ஓட்டுனர் அல்லது பினாமியிடமிருந்து போன் வர தொடங்கியது அதாவது பொருட்களை திரும்பி கொடுக்க வேண்டுமென்றால் இத்தனை ரியால் பணம் கொடுக்க வேண்டும் என்ற பேரம் தொடங்கப்பட்டு விட்டது. நம் சகோதரர் கொண்டு வந்த பொருட்களுடன் ஒரு சில சிம் கார்டுகளும் இருந்துள்ளது அதனை பிரித்து எடுத்து அந்த சிம் கார்டு மூலம் பேசி பேரம் நடத்தியுள்ளது அந்த திருட்டு கும்பல். ஒருவழியாக இத்தனை ரியால் கொடுத்துவிட்டு இந்த இடத்திற்கு வந்து இந்த நேரத்திற்கு வந்து குறிப்பிட்ட ரியாலை கொடுத்துவிட்டு பொருட்களை கொண்டு செல்ல இருதரப்பாரிடத்திலும் ஒப்பந்தம் நிறைவேறியது.

ஓட்டுனர் அல்லது பினாமி குறிப்பிட்ட இடம் மிகவும் பாதுகாப்பற்றது கடும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய என்பதால் நம் சகோதரர் மக்கள் நடமாட்டம் நிறைந்த ஒரு குறிப்பிட்ட பெட்ரோல் ஸ்டேஷனை தேர்வு செய்து குறிப்பிட அந்த இடத்தில் பொருள்கள் மற்றும் ரியால் பரிமாறிக் கொள்ள முடிவெடுக்கப்பட்டது அதனடிப்படையில் குறிப்பிட்ட இடத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு குறிப்பிட்ட தொகையுடன் இரண்டு சகோரர்களை துணைக்கு அழைத்துக் கொண்டு போய் காத்திருக்கும்பொழுது கார் வந்தது ரியால் கை மாறியது பிறகு டிக்கி திறந்துவிடப்பட்டது பொருட்கள் அலங்கோலமான நிலையில் திரும்ப கிடைத்தது.

பொருட்களை பெற்றுக் கொண்டு தன் அறைக்கு சென்று பார்க்கும்பொழுது அனைத்து பொருட்களையும் திறந்து ஆராய்ச்சிகள் நடந்துள்ளது தெரியவந்தது. நம் சகோதரரின் ஒரு மொபைல் போன் அதில் மிஸ்ஸிங் திரும்ப கிடைக்கவில்லை அது போக மற்ற பொருட்கள் அனைத்தும் கிடைத்தது அலங்கோலமாக.

இப்படியும் பிழைப்பு நடத்தக்கூடியவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், அவர்கள் செய்யக்கூடிய இந்த கீழ்தரமான செயல் தூய இஸ்லாமிய மார்க்கம் அனுமதிக்காதது என்று அறிந்தும்கூட இதனால் இவ்வுலகிலும் மறுஉலகிலும் தண்டனை கிடைக்கும் என்று அறிந்திருந்தும் கேடு கெட்ட செயல்களினால் கிடைக்கக்கூடிய வருமானத்தின் மூலம் தங்களுடைய வயிற்றை நிரப்புகின்றனர். தான் செய்கின்ற இந்த தீய செயலை விட்டு நீங்கி ஹலாலான முறையில் சம்பாதித்து ஹலாலான முறையில் செலவளிக்க வேண்டுமாய் அல்லாஹ்வை வேண்டுவோம்.

**குறிப்பு:** தாய்நாடு சென்று திரும்புவோர் என்ன விலை உயர்ந்த பொருட்களை கொண்டு வந்துவிட போகிறோம் என்று அலட்சியமாக இல்லாமல், கவனமாக இருப்பது அவசியமாகும். அரிதான மருந்து

மாத்திரைகள், நகைகள், விலையுயர்ந்த மொபைல்கள் மற்றும் லாப்டாப் போன்ற கம்பியுட்டர் சாதனங்களை கொண்டு வரக்கூடியவர்களும் இருக்கின்றார்கள். பொருட்களின் மதிப்பிற்கு தகுந்தாற்போல் பேரமும் தண்டத் தொகையும் அதிகரிக்கும் என நினைக்கின்றேன் அல்லது இருக்கக்கூடிய பொருட்களில் ஒன்றிற்கு பாதியாக விற்றால் ஓரளவிற்கு தொகை கிடைக்கும் எனில் சம்பந்தபட்ட நபரோடு தொடர்பு கொள்ளாமலேயே தானே விற்று இக்கூட்டம் அபகரித்து கொள்ளவும் வாய்ப்புள்ளது.

**படிப்பினைகள்:**

முடிந்தளவு கவனமாகவும் விழிப்புணர்வுடனும் இருக்கவும், வெளியில் செல்ல நேரும்பொழுது சவூதி அரசாங்கத்தால் அனுமதி வழங்கிய டாக்ஸிகளில் மாத்திரம் அல்லது நன்றாக அறிமுகமான நம்நாட்டு சகோதரர்களின் வாகனங்களில் மாத்திரம் பயணிக்கவும்.

நீங்கள் வாகன ஓட்டிகளாக இருந்து ஒருசில காரணங்களுக்காக அல்லது ஏதோ தேவை கருதி ஒரிரு நிமிடங்களில் திரும்பி வந்துவிடுவோம் என்று நினைத்து வாகனத்தை ஆப் செய்யாமல் அப்படியே விட்டுவிட்டு செல்ல வேண்டாம், நீங்கள் எப்பொழுது அவ்வாறு வாகனத்தை சாவியோடு விட்டுச் செல்வீர்கள் அபகரித்துக் கொள்ளலாம் என்று ஒரு பெருங்கூட்டம் அன்றாடம் அலைந்து திரிந்து கொண்டிருக்கின்றது கவனமாக இருக்கவும்.

வாகனத்தில் உறவினர்களோ அல்லது நண்பர்களோ அல்லது மனைவி மக்களோ இருக்கிறார்கள் ஏசி ஓடுகிறது வாகனத்தை ஆப் செய்தால் வியர்க்கும் என்று நினைத்து வாகனத்தை ஆப் செய்யாமல் அப்படியே விட்டு செல்ல நேர்ந்தால், அப்பொழுதும் உங்கள் வாகனத்தை, வாகனத்திலுள்ளவர்களோடு யாராவது கொண்டு செல்வதற்கு வாய்ப்புள்ளது கவனம் தேவை.

உங்கள் வாகனத்தை எங்காவது பார்க் செய்யவிரும்பினால் வாகனத்தினுள் கண்ணுக்கு தெரியும்படியான இடத்தில் எந்த ஒரு விலையுயர்ந்த பொருட்களையும் விட்டு செல்ல வேண்டாம்.

ஏதாவது பொருட்களை டிக்கியில் வைத்துவிட்டு பார்க் செய்ய நேரிட்டால் பார்க் செய்யும் இடத்தில் அந்த பொருட்களை டிக்கிக்கு மாற்ற வேண்டாம் முன்னெச்சரிக்கையாக ஏற்கனவே வேறொரு இடத்திலேயே பொருட்களை டிக்கியில் வைத்திருந்தால் பொருட்களுக்கு இன்ஷா அல்லாஹ் பாதுகாப்பு கிடைக்கும்.

☆ ☆ ☆

# இஸ்லாத்தில் திருமணம் (நிகாஹ்) பாகம் - 2

*- K.L.M. இப்றாஹீம் மதனி*

**திருமணத்தின் முன் பேணவேண்டிய சில ஒழுங்குகள்**

இஸ்லாமிய மார்க்கம் அனைத்து காரியங்களிலும் ஒழுங்கையும் சட்ட திட்டங்களையும் கடைபிடிப்பது போல் திருமணத்திலும் பல சட்ட திட்டங்களை கடைபிடிக்கின்றது.

**மணமகன் மற்றும் மணமகளின் விருப்பம்**

தனக்கு விருப்பமில்லாத பெண்ணை மணந்து கொள்ளுமாறு மணமகனை நிர்பந்தம் செய்வது கூடாது என்பதுபோல் தனக்கு விருப்பமில்லாத ஒரு ஆணை மணந்து கொள்ளுமாறு மணமகளை நிர்பந்தம் செய்வதும் கூடாது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள், விதவைக்கு அவளது விருப்பமின்றி திருமணம் செய்விப்பது கூடாது. கன்னிப் பெண்ணுக்கு அவளிடத்தில் அனுமதி கேட்காமல் திருமணம் முடித்து வைப்பதும் கூடாது. நபித்தோழர்கள் கேட்டார்கள், அல்லாஹ்வின் தூதரே! அவளிடம் அனுமதி கேட்பது எவ்வாறு? அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள், அவளது மௌனமே அவளது அனுமதியாகும். (முஸ்லிம்)

கன்னிப் பெண்ணிடம் அவளுடைய தந்தை அனுமதி கேட்க வேண்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

பெண்ணுக்கு அவளது விருப்பமில்லாமல் திருமணம் செய்துவைப்பதை நபி(ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள். அவள் விதவையாக இருந்தாலும் கன்னிப்பெண்ணாக இருந்தாலும் சரியே! ஆனால் விதவைப் பெண் தனது விருப்பத்தை வெளிப்படையாக கூறுவாள். ஆனால் கன்னிப் பெண்ணோ வெட்கத்தின் காரணமாக தன் விருப்பத்தை வெளிப்படையாக கூறாமல் மௌனமாக இருந்தால் அதுவே அவளின் சம்மதத்தின் அடையாளமாகும்.

ஒரு பெண்ணை இருவர் பெண் கேட்டு, அவ்விருவரில் ஒருவரை அப்பெண்ணும் விரும்பி அவரும் அவளுக்கு தகுதி உள்ளவராக இருந்தால் அவரையே அவளுக்கு அப்பெண்ணின் பொறுப்பாளர் திருமணம் செய்து வைக்க வேண்டும். அதை மறுப்பதற்கு அப்பெண்ணின் பொறுப்பாளருக்கு உரிமையில்லை அவர் தந்தையாக இருந்தாலும் சரியே! தான் விரும்பாத ஒருவரை தன் தந்தை திருமணம் செய்து வைத்தால் அதை மறுப்பதற்கு ஒரு பெண்ணுக்கு உரிமை இருக்கின்றது. பின்வரும் ஹதீது அதை தெளிவுபடுத்துகின்றது.

ஒரு கன்னிப்பெண் நபி(ஸல்) அவர்களிடம் வந்து என் தந்தை அவரின் சமூகத்தில் அவருக்கிருக்கும் பலவீனத்தையும் அவரின் அந்தஸ்தையும் உயர்த்திக்கொள்வதற்காக அவரின் சகோதரரின் மகனுக்கு என்னை திருமணம் செய்துவைத்து விட்டார் என்பதை கூறினார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் (அந்த திருமணத்தோடு வாழ்வதா இல்லையா என்ற முடிவெடுக்கும் உரிமையை) அந்த பெண்ணிடமே ஒப்படைத்து விட்டார்கள். அதற்கு அந்தப் பெண், என் தந்தை செய்து வைத்த திருமணத்தை நான் அனுமதித்து விட்டேன். என்றாலும் இந்த விஷயத்தில் தந்தைமாருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை மற்ற பெண்களும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை கேட்டேன் என்றார். (இப்னு மாஜா)

இவ்வாறே மணமகனும் தனது வாழ்க்கைத்துணைவியை விரும்பி திருமணம் செய்ய வேண்டும். தனக்கு வரும் வாழ்க்கைத்துணைவி

தனது விருப்பத்திற்கு ஏற்றவளாக இருக்கின்றாளா என்பதை உறுதி செய்து கொள்வதற்காக அவளை திருமணத்திற்கு முன் நேரடியாகவோ, மறைந்திருந்தோ பார்ப்பதற்கு இஸ்லாம் அனுமதிக்கின்றது. இதுவே அவ்விருவரும் நட்புடன் நீடித்து வாழ்வதற்கு முக்கிய காரணமாகும்.

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, ஒரு அன்ஸாரி பெண்ணை தான் திருமணம் முடிக்க இருப்பதாகக் கூறினார். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அந்தப் பெண்ணை நீ பார், அன்ஸாரிகளின் கண்களில் ஏதோ (ஒரு குறை) இருக்கின்றது எனக்கூறினார்கள். (இப்னு ஹிப்பான்)

முஸ்தக்றஜ் அபீ உவானாவின் அறிவிப்பில்: அன்ஸாரி பெண்களின் கண்கள் சிறியது என்று வந்திருக்கின்றது.

அதே கிரந்தத்தின் இன்னும் ஒரு அறிவிப்பில்: ஆம், நான் அந்த பெண்ணை பார்த்தேன் என்றும் வந்திருக்கின்றது.

நான் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, நான் பெண் பார்த்திருக்கின்றேன் எனக் கூறினேன். அப்பெண்ணை நீர் பார்த்தீரா என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள். நான் இல்லை எனக்கூறினேன். நீர் அப்பெண்ணை பார்ப்பீராக, அதுவே உங்கள் இருவருக்கும் மத்தியில் மன ஒற்றுமையயை ஏற்படுத்த மிகவும் சிறந்த வழியாகும் என்றார்கள். (அறிவிப்பவர்: முகீரா இப்னு ஷுஃபா-ரலி- ஆதாரம்: சுனனு ஸயீத் இப்னு மன்ஸுர்)

ஆனால் இன்று நடப்பதோ இதற்கு முற்றிலும் மாற்றமாகும். திருமணத்திற்கு ஒப்புதல் கொடுப்பது அவ்விருவரின் பெற்றோர்கள்தான். திருமணமாகப்போகும் புதுத்தம்பதிகளுக்கு அவர்கள் சந்திக்க இருக்கும் ஒருவரைப்பற்றி மற்றவருக்கு, அவர்களின் நிறமோ குணமோ எதுவுமே தெரியாது. அப்படி தெரிந்து கொள்ள முயற்சித்தாலே அதை குற்றமாக சமுதாயம் கருதுகின்றது. திருமண நாளில்தான் அவ்விருவரும் முதலில் சந்திக்கின்றார்கள். ஒருவருக்கு மற்றவர் பிடித்து விட்டால் ஏதும் பிரச்சினை இல்லை, ஆனால் இருவருக்கும் பிடிக்கவில்லையென்றாலோ அல்லது ஒருவருக்கு பிடிக்கவில்லையென்றாலோ அங்கேதான் பிரச்சினை ஆரம்பிக்கின்றது. இதனால்தான் அதிகமானவர்களின் வாழ்க்கை இடையிலேயே நின்று (தலாக்காகி) விடுகின்றது. அல்லது பெற்றோர்களின் வற்புறுத்தலால் வெறுப்போடு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் (மாமியார் உடைத்தால் மண்குடம், மருமகள் உடைத்தால் பொன்குடம் என்பது போல)சின்ன சின்ன குறைகளையெல்லாம் பெரிதாக்குகின்றார்கள். இன்னும் சிலரோ பெற்றோர்களின் விருப்பத்திற்காக ஒருத்தியையும் தனது விருப்பத்திற்காக சமுதாயத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ இன்னொருத்தியையும் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். இதற்கெல்லாம் காரணம் நாம் இந்த விஷயத்தில் நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த சுன்னாவை புறக்கணித்ததேயாகும்.

**குறிப்பு:** தான் மணமுடிக்க இருக்கும் பெண்ணை மணமுடிக்க இருக்கும் ஆண் பார்க்கலாம் என்பதை தவறாக விளங்கிவிடக்கூடாது. ஒரு பெண்ணை மணமுடிக்க வேண்டும் என்ற முடிவு எடுத்த பின்பே அந்த அனுமதி என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். அதுவும் இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறையில் அமைய வேண்டுமே தவிர, இப்போது நடப்பது போன்று பள்ளிக்கூடங்களிலும் பொதுஇடங்களிலும் வைத்தக் கொள்ளும் உறவை அது குறிக்காது என்பதை வாசகர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

## திருமணத்தின் நிபந்தனைகள்

திருமணம் நடப்பதற்கு முன், பின்வரும் நிபந்தனைகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

1. மணமகன்
2. மணமகள்
3. அவ்விருவரின் விருப்பம்
4. மணமகளின் பொறுப்பாளரின் அனுமதி (வலி)
5. மணமகனின் ஒப்புதல்
6. இரண்டு சாட்சிகள்
7. மணமகள் திருமணம் செய்வதற்கு தடுக்கப்படாத பெண்ணாக இருக்க வேண்டும்.

மேல் கூறப்பட்ட நிபந்தனைகள் நிறைவான பின்பே திருமணம் முழுமையடையும். மணமகன் மணமகள் என்ற மூலகாரணத்தர்கள் இடம்பெறவேண்டும். அவர்களுக்கு இருக்க வேண்டிய பண்புகள் பற்றி முன் சென்ற தொடரில் தெரிந்து கொண்டோம். அவ்வாறே அவ்விருவரும் ஒருவர் மற்றவரை விரும்பியிருக்க வேண்டும். நிர்பந்தத்தின் அடிப்படையில் திருமணம் முடித்து வைக்கக்கூடாது. நான்காவது நிபந்தனை மணமகளின் பொறுப்பாளரின் அனுமதியுடன் அந்த திருமண ஒப்பந்தம் நடக்க வேண்டும்.

எந்த ஒரு பெண்ணாவது தன் பொறுப்பாளரின் (வலியின்)அனுமதியின்றி திருமணம் செய்துகொள்கின்றார்களோ அவளுடைய திருமணம் செல்லுபடியாகாதது அவளுடைய திருமணம் செல்லுபடியாகாதது அவளுடைய திருமணம் செல்லுபடியாகாதது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி) அடுத்ததாக திருமண ஒப்பந்தத்தை மணமகன் முழுமனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அடுத்ததாக திருமணம் நடந்ததை இருவர் சாட்சியம் கூறவேண்டும். மணமகளுக்கு பொறுப்பாளியும், இரு சாட்சிகளுமின்றி திருமணம் நிறைவேறாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (தப்ரானி)

## மணமகளின் பொறுப்பாளிக்கு இருக்கவேண்டிய பண்புகள்:

1. புத்தியுள்ளவராக இருக்க வேண்டும்
2. பருவ வயதை அடைந்திருக்க வேண்டும்
3. சுதந்திரமானவராக இருக்க வேண்டும்
4. முஸ்லிமாக இருக்க வேண்டும்
5. நீதமுள்ளவராக இருக்க வேண்டும்
6. ஆணாக இருக்க வேண்டும் (ஒரு பெண் இன்னுமொரு பெண்ணுக்கு திருமணம் செய்துவைப்பதும் கூடாது. தனக்குத்தானே ஒரு பெண் திருமணம் செய்து வைப்பதும் கூடாது. விபச்சாரியே தனக்குத்தானே திருமணம் செய்து வைப்பாள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னுமாஜா)

7. திருமணத்தை நடத்தி வைக்கும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

**வலியாக வரத்தகுதிபெற்றவர்கள்:**

1. தந்தை
2. தந்தையின் தந்தை...
3. மகன்
4. மகனுடைய மகன்... (பேரன்)
5. தாய்க்கும் தந்தைக்கும் பிறந்த சகோதரன்
6. தந்தைவழி, தாய்வழிச் சகோதரன்
7. அவ்விருவரின் மகன்கள்

இதன் பின் பெண்ணின் வாரிசுரிமையை பெற தகுதியுள்ளவர்களில் மிக நெருக்கமுள்ளவர்கள் வலியாக இருப்பார்கள். அப்படி தகுதியுள்ள யாராவது இல்லையெனில் அந்த நாட்டின் முஸ்லிமான தலைவர் அல்லது அவருக்கு பகரமாக உள்ள முஸ்லிமான காஜியோ வலியாக இருப்பார்கள்.

தொடரும் இன்ஷா அல்லாஹ்....

# பாராட்டுக்கள் பெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சி

*- நாஞ்சிலார்*

**அல்ஹம்துலில்லாஹ் எல்லா புகழும் இறைவனுக்கே!**

கடந்த ஹிஜ்ரி 1430, துல்கஃதா பிறை 18 (நவம்பர் 6ம் தேதி) வெள்ளிக்கிழமை ஜித்தா செனாயிய்யா இஸ்லாமிய அழைப்பகத்தில், சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்ச்சி மற்றும் இஸ்லாமிய மாலை அமர்வு இனிதே நடந்தேறியது, இதை செனாயிய்யா இஸ்லாமிய அழைப்பகம், சுவனப்பாதை மாத இதழின் குழுமம் மற்றும் தமிழ் தஃவா கமிட்டி (ஜித்தா) ஆகியவை மிகவும் சிறப்பாக நடத்தி பெரும் பாராட்டையும் பெற்றது,

இந்நிகழ்ச்சிற்கு சகோ. ஹாஜா முஹ்யுத்தீன் தலைமை தாங்கி, நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார், முதலாவதாக மௌலவி இப்ராஹீம் மதனி அவர்கள், தஃவாவில் பெண்களின் பங்கு என்ற தலைப்பில் ஆற்றிய உரை பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது, இஸ்லாத்திற்காக நாமும் இப்பணியை செய்து வெற்றி பெற வேணடும் என்ற ஆர்வம் ஒவ்வொருவரின் மனதிலும் பதிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக யான்பு மாநகரத்திலிருந்து வருகை தந்திருந்த டாக்டர் அஹ்மது பாகவி P.hd., அவர்கள் குர்ஆனும் இலக்கியமும் என்ற தலைப்பில் ஆற்றிய உரை மிகவும் அற்புதம், குர்ஆனில் உள்ள இலக்கியங்களை ஒன்றன்பின் ஒன்றாக அவர் விளக்கியது, வருகை தந்தோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவ்வுரையின் முடிவாக மஃரிப் தொழுகையின் அதான் சொல்லப்பட்டது அத்துடன் முதலாவது அமர்வு முடிந்து மக்கள் தொழுகைக்கு சென்றனர்,

தொழுகைக்குப்பின் முதலாவதாக சகோ. முஃப்தி அவர்கள் கட்டுரை போட்டியில் தேர்ச்சி பெற்றவர்களை எப்படி, எந்த முறையில் தேர்வு செய்யப்பட்டது என்பதை மிகவும் தெளிவாக விளக்கமளித்தார். அது கட்டுரை போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெறாதவர்களுக்கு ஆறுதலாகவும், பரிசு பெற்றவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கும் வண்ணமும் அவருடைய சிற்றுரை அமைந்தது.

அடுத்ததாக சகோ. சாதிக் சிக்கந்தர் அவர்கள் சுவனப்பாதை அன்றும், இன்றும் என்ற தலைப்பில் சிற்றுரை ஆற்றினார். அன்று ஹிஜ்ரி 1425 ஷவ்வால் மாதம் ஆரம்பித்து, கடந்த 5 வருடங்களாக பல்வேறு கட்டுரைகளையும், பல்வேறு விஷயங்களையும் தாங்கி இன்றும் சிறந்து விளங்குவதையும் இது என்றும் சிறந்திட மக்களின் ஆதரவு தேவை என்பதை சுட்டிக்காட்டினார்,

அதன்பின் சகோ. அக்பர் பாட்ஷா அவர்கள் சுவனப்பாதை மாத இதழுக்கு மதிப்புரை வழங்கினார், அவரின் உரை சுவனப்பாதைக்கு பொன்னாடை போர்த்தியது போன்று அமைந்தது, மற்ற பத்திரிகைகளையும் சுவனப்பாதையையும் ஒப்பிட்டு பார்க்கையில் இதன் வளர்ச்சி மேலோங்கி நிற்கிறது என்றும், ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள பத்திரிகைகளை ஒன்று சேர்த்து ஒரே தொகுப்பாக வெளியிட்டால் நல்லது என்று கூறியது அவருடைய உரையில் மிகவும் முக்கிய அம்சம், உரையின் சார்பாகவே, பத்திரிகையின் வடிவமைப்பு, அதில் வந்த முக்கிய கட்டுரைகள், குறுக்கெழுத்துப் போட்டி, நபி (ஸல்) அவர்கள் வழியில் நம் ஹஜ்ஜின் வெளியீடு, சுவனப்பாதை வெளியிட்ட கையடக்க துஃஆ புத்தகம் போன்றவற்றை Power point மூலமாக காட்டப்பட்டது.

இதை தொடர்ந்து எல்லோராலும் எதிர்பாத்திருந்த பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது, இப்பரிசளிப்பு நிகழ்ச்சியை சிறப்பித்து தருவதற்காக ஜித்தா செனாயிய்யா அழைப்பகத்தில் பணிபுரியும் ஷேஃக் மன்சூர் ஜான் (Public Relation Officer), ஷேஃக் முஹம்மத் பாபக்கர், ஷேக் அலி அத்தா ஆகியோர் வருகை தந்திருந்தார்கள். முதலில் ஷேஃக் மன்சூர் ஜான் எல்லோருக்கும் நன்றி கூறியும் பரிசு பெற்றவர்களை வாழ்த்தியும் அரபி மொழியில் சிற்றுரை நிகழ்த்தினார் அதை மௌலவி இப்ராஹீம் மதனி அவர்கள் தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

இதை தொடர்ந்து 13 ஆறுதல் பரிசுகளை, சகோ. அக்பர் பாட்ஷா, டாக்டர், அஹ்மது பாகவி மற்றும் சுவனப்பாதை குழுவினரால் வழங்கப்பட்டது, மேலும் மீதமுள்ள மூன்றாம், இரண்டாம், முதலாம் பரிசுகளை ஜித்தா செனாயிய்யா சென்டரில் பணி புரியும் ஷேஃக் மன்சூர் ஜான், ஷேஃக் முஹம்மத் பாபக்கர், ஷேக் அலி அத்தா ஆகியோரால் வழங்கப்பட்டது.

அத்துடன் இஷா அதான் கொடுக்கப்பட்டதும் நிகழ்ச்சி நிரல் இனிதே முடிக்கப்பட்டது, இஷா தொழுகைக்குப்பின் இரவு உணவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, நிகழ்ச்சிற்கு வந்திருந்த நண்பர்கள், பெரியோர்கள், குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் உணவு உண்டு மகிழ்ந்து இனிதே சென்றனர், எல்லா புகழும் இறைவனுக்கே!

# துல் ஹஜ் மாதத்தின் முந்திய பத்து நாட்களின் சிறப்புகளும், உழ்ஹிய்யாவின் சட்டங்களும்

## சிறப்புகள்

1. துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல் அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்விற்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவுமா? என நபித்தோழர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்வதை விடவும்தான், ஆனால் அல்லாஹ்வின் பாதையில் பொருளையும், உயிரையும் அர்ப்பணித்து வீரமரணம் அடைந்தவரைத் தவிர என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: புகாரி

2. நாட்களில் மிகச்சிறந்த நாள் அரபாவுடைய நாள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் இப்னு ஹிப்பான்)

## அரஃபா நோன்பு

அரஃபா நோன்பு - அரஃபா நோன்பு (நோற்பவருக்காக) அந்த நாளுக்கு முந்திய வருடத்தின் பாவங்களையும், அதற்கு பின்னுள்ள வருடத்தின் பாவங்களையும் அல்லாஹ் மன்னிப்பான் என நான் நம்புகின்றேன் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

**குறிப்பு:- அரஃபா நோன்பை ஹாஜிகள் நோற்கக்கூடாது, ஹஜ் செய்யாதவர்கள் இந்த நோன்பை நோற்பது மிகவும் சிறந்தது.**

அரஃபா தினத்தன்று அரஃபாவில் தங்கியிருந்த நபி(ஸல்) அவர்கள் தன்னிடம் கொண்டுவந்த பாலை அருந்தி தான் நோன்பு நோற்கவில்லை என்பதை மக்களுக்கு அறிவித்திருக்கிறார்கள். (புகாரி, முஸ்லிம்)

## தக்பீர் கூறுவது

கடமையான தொழுகைகளுக்குப் பின்னரும், பள்ளிவாசல், வீடு, கடைவீதி போன்ற எல்லா இடங்களிலும் தக்பீர் கூறுவது,

துல் ஹஜ் மாத முதல் பத்து நாட்களில் செய்யக்கூடிய நல்அமல்களுக்கு ஈடாக வேறு எந்த நாட்களில் செய்யும் நல் அமல்களும் அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானவைகளாக இல்லை. ஆகவே லாஇலாஹா இல்லல்லாஹ், அல்லாஹு அக்பர், அல்ஹம்து லில்லாஹ் போன்ற திக்ருகளை அதிகமாக செய்யுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.(அஹ்மத்)

பெருநாளைக்காக கூறக்கூடிய தக்பீரை அரஃபா நாளின் ஸுப்ஹு தொழுகையிலிருந்து பிறை 13ம் நாள் அஸ்ர் தொழுகை வரைக்கும் கூறுவது.

## உழ்ஹிய்யா

உழ்ஹிய்யா என்பது ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைக்கு பின் இறை திருப்தியை நாடி அறுக்கப்படும் பிராணிக்கு சொல்லப்படும், இது நபியவர்கள் வலியுறுத்திய சுன்னத்தாகும்.

கொம்புள்ள, கருப்பு நிறம் கலந்த இரண்டு வெள்ளை நிற ஆடுகளை நபி(ஸல்) அவர்கள் உழ்ஹிய்யாவாக கொடுத்தார்கள், அப்போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூறி அவ்விரண்டின் ஒரு பக்கத்தின் மீது தனது காலை வைத்து கையால் அறுத்தார்கள். (புகாரி)

## உழ்ஹிய்யா கொடுப்பதற்கு தகுதியான பிராணிகள்

- ஆடு. மாடு, ஒட்டகம் (புகாரி)
- ஒரு குடும்பத்திற்கு ஒரு ஆடு போதுமாகும் (திர்மிதி)
- மாட்டிலும், ஒட்டகத்திலும் ஏழு பேர்கள் பங்கு கொள்ளலாம். (திர்மிதி)
- உழ்ஹிய்யாவிற்கான கால்நடைகளில் கீழ்கண்ட குறைகள் இருக்கக்கூடாது

கண் குருடு, கடுமையான நோயானவை, மிகவும் மெலிந்தவை, நொண்டியானவை, அங்கங்கள் குறையுள்ளவை.

**குறிப்பு:- ஹாஜிகள் கொடுக்கும் குர்பானியும் இவ்வாறே இருக்க வேண்டும்.**

## நேரம்

ஹஜ்ஜுப்பெருநாள் தொழுகைக்கு பின் அறுக்க வேண்டும்.

யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அது அவரின் குடும்பத்தேவைக்காக அறுத்ததாக கணக்கிட்டுக்கொள்ளட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

யார் (பெருநாள்) தொழுகைக்கு முன் அறுக்கின்றாரோ அவர் இன்னும் ஒரு முறை குர்பானி கொடுக்கட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

## அறுக்கும் முறை

- ஆடு, மாடுகளை ஒருக்கணித்து படுக்கவைத்து அறுக்க வேண்டும். (முஸ்லிம்)
- ஒட்டகத்தை நிற்கவைத்து அறுபடும் நரம்புகள் வெட்டப்படும் அளவுக்கு அறுக்கும் கருவியால் கீறிவிடவேண்டும். (முஸ்லிம்)

அறுக்கும் போது "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என்று கூற வேண்டும். (புகாரி)

## உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளை பயன்படுத்தும் முறை

உழ்ஹிய்யா கொடுக்கப்பட்ட பிராணிகளின் முடிகளையோ, தோல்களையோ, மாமிசங்களையோ அறுத்தவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது.

குர்பானி கொடுப்பதற்கான ஒட்டகங்களை மேற்பார்வை செய்வதற்கு என்னை நபி(ஸல்) அவர்கள் நியமித்தார்கள், அவைகளின் மாமிசம், தோல், ஆகியவற்றை தர்மமாகவே கொடுக்க வேண்டும் என்றும், அவற்றில் எதையும் அறுப்பவருக்கு கூலியாக கொடுக்கக்கூடாது என்றும் கூறினார்கள், அறுப்பதற்குரிய கூலியை நாங்கள் தனியாகவே கொடுப்போம் என அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (புகாரி, முஸ்லிம்)

## உழ்ஹிய்யா கொடுப்பவர் செய்யக்கூடாதவைகள்

துல் ஹஜ் மாதம் பிறந்ததும் உழ்ஹிய்யா கொடுக்க நாடியவர் தன்னுடைய முடி மற்றும் நகத்திலிருந்து எதையும் அகற்றக்கூடாது என நபி(ஸல்) அவர்கள் தடைசெய்தார்கள்.(முஸ்லிம்)

**குறிப்பு:- இத்தடை உழ்ஹிய்யா கொடுப்பவருக்கு மாத்திரம்தான், அவரின் குடும்பத்தினருக்கு அல்ல. ஹஜ்ஜுடைய ஹத்யு (குர்பானி) கொடுப்பவர்களுக்கும் இத்தடை கிடையாது.**

*கிரிக்கெட் - முதல் பக்கத் தொடர்ச்சி ...*

கேள்விக்கு என்ன பதில் தயாரித்து வைத்து இருக்கிறார்? தொழுகையை விடுவதால் இஸ்லாமிய வட்டத்தில் இருந்து வெளியே செல்லக்கூடிய நிலை இருக்கும்போது அப்படிப்பட்ட விளையாட்டு நமக்குத் தேவைதானா? இளைஞர்களே சிந்திக்கக் கடமைப்பட்டு உள்ளீர்கள்!

**வீண் செலவுகள் பண விரயம்:**

இந்த விளையாட்டைப் போன்று எந்த ஒரு விளையாட்டிலும் பணம் வீணடிக்கப்படுவதில்லை. போட்டிகளைக் காண டிக்கெட் வாங்குவது, டிஷ் (குடை) வைப்பது, பணம் கொடுத்து கட்டண சேனல்களை (Pay Channel) பெறுவது, எல்லாமே வீண்செலவுகள். தான தர்மங்கள் செய்வதில் இருந்து விலகி நிற்கும் இவர்கள், போட்டிகளை காண்பதற்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்வது ஆச்சரியமாக உள்ளது. அத்தியாவசிய செலவுகள் செய்வதற்கு ஆயிரம் முறை யோசிக்கக்கூடியவர்கள் கிரிக்கெட் போட்டிகளை காண்பதற்காக ஆயிரக்கணக்கில் செலவு செய்யத் தயங்குவதில்லை.

இவர்கள் திர்மிதியில் இடம் பெற்ற ஒரு ஹதீதை வசதியாக மறந்துவிட்டார்கள் என்றே தோன்றுகிறது. 'முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் மறுமை நாளில், நான்கு கேள்விகளுக்கு பதில் சொல்லாத வரையில் ஒரு அடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியாது. அவற்றில் ஒன்றுதான் சம்பாதித்த பணத்தை எவ்வாறு செலவு செய்தாய்... (திர்மிதி)

மேலும் இளைஞர்களே! இறைவன் கூறுவதுபோல் வீண் செலவுகள் செய்து ஷைத்தானின் சகோதரர்களாகி விடாதீர்கள். **நிச்சயமாக வீண்விரயம் செய்வோர் ஷைத்தானுடைய சகோதரர்களாக இருக்கின்றனர். ஷைத்தானோ தன் இரட்சகனுக்கு நன்றி செலுத்தாது மாறு செய்தவனாக இருக்கின்றான்.** (17:27)

**பணம் புகழ் சம்பாதிக்க வேண்டும் என்ற பேராசை:**

கிரிக்கெட் வீரர்கள் போன்று பணம் புகழ் ஈட்ட வேண்டும் என்ற பேராசை காரணமாக மார்க்கம், படிப்பு எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிரிக்கெட் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். கிரிக்கெட் வீரர்கள் செல்வச்செழிப்பில் மிதப்பதை பார்த்துவிட்டு இந்திய அணிக்காக விளையாடினால் கோடீஸ்வரனாகி விடலாம் என்ற எண்ணத்தில் அதிகமான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதற்கு பதிலாக கிரிக்கெட் விளையாடுவதற்கு பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை இஸ்லாமிய முறைப்படி வளர்க்க வேண்டிய பொறுப்பு உங்கள் மீது சாட்டப்பட்டுள்ளது. இறைவன் திருமறையில் கூறுகிறான் **(செல்வத்தையும், மக்களையும்) ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேடிக்கொள்வது உங்களைப் பராக்காக்கிவிட்டது.** (102:1). இறைவன் கூறுவது போல செல்வத்தைப் பெருக்கும் ஆசை உங்களை பராக்காக்கி விடவேண்டாம் மறுமைநாளில் இறைவன் முன்னிலையில் என்னுடைய குழந்தைகயை இஸ்லாமிய முறைப்படி வளர்த்தேன் என்று பயமில்லாமல் சொல்லக்கூடிய ஒருவராக அனைத்து பெற்றோர்களையும் ஆக்கி வைப்பானாக!

**பொழுதுபோக்கு:**

மிகப்பெரும் அறிஞர்கள் கூட இந்த விஷயத்தில் மூளை மழுங்கடிக்கப்படுகிறார்கள் என்பது நிதர்சனமாக உண்மை. ஒரு உண்மையான இறைவிசுவாசிக்கு வணக்கவழிபாடுகள் மற்றும் நியாயமான அன்றைய தேவைகளுக்கு 24 மணி நேரம் போதாமல் இன்னும் ஒரு சில மணி நேரங்கள் இருந்தால் இபாதத்துகள் செய்வதற்கு நன்றாக இருக்குமே என்று நினைப்பான், நிலைமை இப்படி இருக்கும்போது, பொழுது போக்குவதற்கு என்று எங்கே நேரம் ஒதுக்க முடியும். இளைஞர்களே! உங்களுக்கென்று, இறைவன் பொறுப்புகளை ஒப்படைத்துள்ளான் பொழுது போக்குவதற்கு என்று நேரம் ஒதுக்க முடியாத சூழ்நிலையில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். மறுமையில் இறைவன் முன்னிலையில் பல கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறோம்.

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். மறுமை நாளில் இறைவன் முன்னிலையில் நேரத்தை எவ்வாறு செலவழித்தாய் என்ற கேள்விக்கு பதில் சொல்லாத வரை ஒரு அடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியாது. (திர்மிதி)

விலைமதிப்பற்ற நேரத்தை கிரிக்கெட் பார்ப்பதில் கழித்துவிட்டு மறுமைநாளில் நஷ்டமடைந்தோரில் ஒருவராக நம்மை ஆக்கிவிடாமல் அல்லாஹ் அருள்புரிவானாக!.

**உடல் ஆரோக்கியம்:**

இந்த விளையாட்டை நியாயப்படுத்துவோர் கூறும் அநியாயமான காரணம்தான் இந்த உடல் ஆரோக்கியம். பகல் முழுக்க அல்லது இரவிலோ வெயில் மற்றும் குளிரில் உடலை வருத்திக் கொண்டு விளையாடுவது தான் ஆரோக்கியமான விளையாட்டு எனில் ஆரோக்கியமாக விளையாடக்கூடிய மற்ற விளையாட்டுக்களை என்னவென்று கூறுவார்கள். கிரிக்கெட் விளையாடுபவர்கள் உடல் ஆரோக்கியமாக இருக்கும் நேரத்தை விட ஆரோக்கியமில்லாமல் இருக்கும் நேரம்தான் அதிகம். Unfit, Cramp, Injury, Back pain, Wounds, Shoulder Operation போன்ற வார்த்தைகள் எல்லாம் கிரிக்கெட் விளையாடுபவர்களுக்காக உருவாக்கப்பட்ட வார்த்தைகள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதுதான் ஆரோக்கியம் என்றால், அந்த ஆரோக்கியம், இஸ்லாமிய இளைஞர்களே, நமக்குத் தேவையில்லை.

இறைவன் திருமறையில் **இன்னும் உங்கள் கைகளாலேயே உங்களை அழிவின் பக்கம் கொண்டு செல்லாதீர்கள் (2:185) என்று கூறுகிறான்.** ஆகையால் கிரிக்கெட்டை விட்டு விலகி நில்லுங்கள் ஆரோக்கியமாக வாழுங்கள்.

**சூதாட்டம்:**

கிரிக்கெட்டும், சூதாட்டமும் பிரிக்க முடியாததாக ஆகிவிட்டதோ என்று எண்ணும் அளவிற்கு நிலமை மோசமாகிவிட்டது. நாளுக்கு நாள் புதிய புதிய சட்டங்களை உண்டாக்குவதன் மூலம், சூதாட்டம் அதிகமாகிக் கொண்டு இருப்பதையே காட்டுகிறது. சூதாட்டத்தில் ஈடுபடாத பிரபல கிரிக்கெட் வீரர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். Match fixing, Bookies இவைகள் எல்லாம் கிரிக்கெட்டும், சூதாட்டமும் இரண்டறக் கலந்து விட்டதையே காட்டுகிறது. இறைவன் திருமறையில் கூறுகிறான்.

ஈமான் கொண்டோரே! மதுபானமும், சூதாட்டமும்,

கற்சிலைகளை வழிபடுதல் அம்புகள் எறிந்து குறி கேட்பதும் ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ளவையாகும். (5:90)

கிரிக்கெட் விளையாடுவதன் மூலமாகவோ அல்லது கண்டுகளிப்பதன் மூலமாகவோ ஏதோ ஒரு வகையில் சூதாட்டத்தை ஊக்குவிப்பவர்களாகவே இருக்கின்றோம். ஆகையால் இளைஞர்களே! ஷைத்தானின் அருவருக்கத்தக்க செயல்களில் உள்ள இந்த கிரிக்கெட்டில் சூதாட்டத்தில் இருந்து உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள அல்லாஹ் போதுமானவன்.

**ஆடைகுறைப்பு அழகிகள்:**

மேற்கத்திய நாடுகளில் பிரபலமான, ஆட்டத்தின் நடுவே ரசிகர்களை மகிழ்விக்க இந்த அரைகுறை அழகிகள்? நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆடை குறைப்பு, புயல் இந்தியாவையும் மையம் கொண்டு விட்டது. இந்த ஆடைகுறைப்பு அழகிகளின்? (Cheer Girls) ஆட்டம், இந்திய போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்றே கூறலாம். ஆட்டத்தின் நடுவே காட்டப்படும் அழகிகளில் ஆட்டம் விபச்சாரத்தின் பக்கம் இட்டுச் செல்ல காரணமாக அமைகிறது.

கண்கள் செய்யும் விபச்சாரம் பார்ப்பது என்று முஹம்மது நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள். (புஹாரி 609)

இறைவன் திருமறையில் '(நபியே) முஃமினான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும் (24:30)

கிரிக்கெட் போட்டிகளைக் காண்பதன் மூலம் நாம் கண்களால் விபச்சாரம் செய்தவர்களாக ஆகிவிடுகிறோம் மேற்கண்ட குர்ஆன் ஹதீதை கண்ணியப்படுத்தும் வகையிலும் விபச்சாரத்தின் பக்கமும் நம்மை இட்டுச் செல்லாமலும் இருக்க கிரிக்கெட் போட்டிகளை காண்பதில் இருந்து தடுத்துக் கொள்ளுமாய் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

**தனிநபர் வாரியங்களின் வளர்ச்சி:**

தீமைகளுக்கு துணை போகிற நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுகிற கிரிக்கெட் விளையாட்டால் தனி நபர்கள் BCCI போன்ற வாரியங்கள்தான் செல்வச் செழிப்புடன் திளைக்கின்றன. ஒரு கிரிக்கெட் வீரரின் 2 வருடத்திற்கு முந்திய சொத்து மதிப்பு 200 கோடிகளுக்கு மேல். இப்படி பல கிரிக்கெட் வீரர்களின் சொத்துக்களை முடக்கினால் ஒரு மாநிலத்தின் பட்ஜெட்டையே சமாளித்துவிடலாம். உலகத்தில் கிரிக்கெட் அதிகம் பார்க்கும் நாடு கிரிக்கெட் விளையாட்டால் அதிக வருமானம் பெறும் வாரியம், இவற்றால் ஒரு நாட்டின் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு என்ன பயன்? நாட்டுக்காக உழைத்த எத்தனையோ தியாகிகள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்க நாட்டின் வளர்ச்சியில் ஒரு துளி பங்களிப்புக்கூட இல்லாத இவர்கள் கோடிகளில் புரண்டு கொண்டிருக்கிறார்கள் இது ஒரு வெட்கக்கேடு! ஆகையால் தனி நபர்கள் வாரியங்கள் மட்டுமே பயனடைகிற ஒரு நாட்டுக்கு எந்த விதத்திலும் பலனில்லாத இந்த விளையாட்டுக்களை அரசாங்கம் தடை செய்தால்கூட பொருத்தமாக இருக்கும். இளைஞர்களே! நீங்கள் செலவழிக்கின்ற ஒவ்வொரு பைசாவும் வீணாக அவர்களை சென்றடைகிறது என்பதை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இளைஞர்களே! விழித்தெழுங்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பஜ்ர் மற்றும் இஷா தொழுகையை ஜமாஅத்தோடு தொழாதவர்களை முனாபிக் என்று அடையாளம் காட்டியுள்ளார்கள். காலை நேரத்தில் கிரிக்கெட் போட்டிகளை காண்பதற்காக விழித்தெழும் நாம் பஜ்ர் தொழுகைக்கு தூங்கிக் கொண்டிருப்பதை என்னவென்று சொல்வது.

இளைஞர்களே! உங்கள் கால்கள் விளையாட்டு மைதானங்கள் (Stadium) பக்கம் செல்வதில் இருந்தும் தவிர்த்து பள்ளிவாசல்கள் பக்கம் செல்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

இளைஞர்களே! உங்கள் முன் இந்த சமுதாயத்தை தட்டி எழுப்பக்கூடிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது மறுமையில் உங்கள் பொறுப்புகளைப்பற்றி கண்டிப்பாக வினவப்படுவீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள்

இளைஞர்களே! கிரிக்கெட் வீரர்களை Roll Modelலாக ஆக்காமல் திருக்குர்ஆனில் 85வது அத்தியாயத்தில் சொல்லப்படுகிற ஓரிறைக் கொள்கையை மக்கள் முன்னியையில் எடுத்து வைப்பதற்காக தன்னுயிரை மாய்த்துக் கொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களை ஈமானின் பக்கம் திரும்ப வைத்த இளைஞரை உங்களுடைய முன்மாதிரியாக (Roll Model) ஆக்கிக் கொள்ளுங்கள்.

இறைவன் இந்த சமுதாயத்தை கிரிக்கெட் என்ற படுகுழியில் விழுவதில் இருந்தும் காப்பாற்றி கரை சேர்ப்பானாக ஆமீன்.

**கட்டுரையாளரின் சுய அறிமுகம்:**

பெயர்: M. அன்வர்தீன், ஊர்: புது ஆத்தூர் (பெரம்பலூர் மாவட்டம்) வயது: 45, திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளது. வேலை: சவூதி அரேபியாவில் கப்ஜி என்ற ஊரில் ஒரு தனியார் கம்பெனியில் பணி புரிகின்றேன்.

நான், இளமைப்பருவத்தில், இதன் தீமைகளை உணராததால், அதிகமாக கிரிக்கெட் பார்த்து நேரத்தை வீணடித்தவர்களில் ஒருவன். ஆகையால், கிரிக்கெட்டில் ஈடுபட்டிருக்கின்ற அனைவரும் அதனால் ஏற்படக்கூடிய தீமையை உணர்ந்து, அதிலிருந்து விலகி, நேரத்தை அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இந்த கட்டுரை எழுதப்பட்டது. அல்லாஹ் மிக அறிந்தவன்.


## வருட சந்தா 12 ரியால் மட்டுமே!

ஹிஜ்ரி-1431 முஹர்ரம் மாதம் முதல்– துல்ஹஜ் வரை சுவனப்பாதை பத்திரிக்கைக்கு சந்தாதாரர் ஆக விரும்புபவர்கள் கீழ்கண்ட தொலைப்பேசி எண்களுக்கு தொடர்புக் கொண்டு சந்தாக்களை செலுத்துமாறு கேட்டு கொள்கிறோம்.

**மௌலவி. இப்ராஹீம் மதனி – 050662522, சகோ. ஹாஜா முஹைதீன் – 0506096740, சகோ. சாதிக் – 0507881298, சாதிக் சிக்கந்தர் – 0559609469, சகோ. இர்ஃபான் - 0535878257, சகோ. யஹ்யா – 0506674546.**

# இறைமறையில் அறிவியல் அற்புதங்கள் (பாகம் - 15)

- டாக்டர் ஷேக் சையது M.D.

கருவறையின் வடிவமைப்பு, கருவணகங்கள் (ஓவரிகள்), அதில் உருவாகும் சினை முட்டைகள் பற்றிய சில தகவல்களை கடந்த தொடரில் நாம் கண்டோம். அதன் தொடர்ச்சியாக சினை முட்டை கருவணவகங்களிலிருந்து எவ்வாறு வெளியேறி, கர்ப்பப்பையை அடைகிறது என்பதை இந்தத் தொடரில் பார்ப்போம்.

**மகுடம் சூடிய மஹாராணி:**

ஒரு பெண், குழந்தையாக பிறக்கும் போது சுமார் 8 இலட்சம் கரு முட்டைகளுக்கான வளர்ச்சியடையாத மூலசெல்கள் இருக்கும், அவள் வளர்ந்து, பருவ வயதை அடையும் போது அவற்றில் சில ஆயிரம் செல்கள் மட்டுமே மீதம் இருக்கும் என்பதையும் கண்டோம்.

இந்த சில ஆயிரம் செல்கள் அனைத்தும் கருவுறும் நிலையை அடைவதில்லை. அதில் சில நூறுகள் மட்டுமே கருவுறும் தகுதியில் இருக்கும்.

உடல் செல்களிலேயே மிகவும் சிறியது விந்தணுவாகும் என்பதை முன்பே நினைவுபடுத்தியுள்ளேன். விந்தணுவைவிட சுமார் 85 ஆயிரம் மடங்கு பெரியதாகும் இந்த சினை முட்டை. செல்களிலேயே மிகவும் பெரியதும் இந்த சினை முட்டைதான்.

இந்த சினை முட்டை, மாதம் ஒன்று வீதம் இரு ஓவரிகளிலிருந்தும் மாறிமாறி வெளியேறுகிறது. அதாவது ஒரு மாதம் வலது புறமுள்ள ஓவரியிலிருந்து வந்தால் அடுத்த மாதம் இடது புறமுள்ள ஓவரியிலிருந்து வெளியேறும். இவ்வாறு ஒரு வருடத்திற்கு ஒரு பெண்ணிடம் 12 சினை முட்டைகள் முதிர்ந்து வெளியேறும்.

சராசரியான ஒரு பெண் சுமார் 12வயது முதல் 50 வயது வரை அதாவது 38 ஆண்டுகள் கருவுறும் தகுதியில் இருப்பாள். இதன் படி 38X12=456 சினை முட்டைகள் சராசரியான ஒரு பெண்ணிடமிருந்து வெளியேற வாய்ப்புகள் உண்டு. அவள் கருவுற்றிருக்கும் காலங்களில் சினை முட்டை வெளியேறுவதில்லை. இதனையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அவள் ஆயுட்காலம் முழுவதிலும் முதிர்வடைந்த நிலையில் உள்ள சுமார் 400 சினைமுட்டைகளே வெளிப்படும்.

ஒரு பெண்ணுக்கு மாதவிடாய் நின்ற நாள் முதல், இந்த சினை முட்டை தனக்கென உள்ள மெல்லிய பைக்குள் பாதுகாப்பாக வளர்ந்து வருகிறது. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அடைந்ததும், சினைமுட்டையை மூடிய மெல்லிய பை வெடித்து விடுகிறது. அப்போது அதிலிருந்து வெளிப்படும் ஒரு வகையான திரவம் முதிர்வடைந்த சினை முட்டையை ஃபிலோப்பின் டியூப்பினை நோக்கித் தள்ளுகிறது. இவ்வாறு ஒரு சினை முட்டை முதிர்வடைந்து வெளியேறுவதற்கு மாதவிடாய் நின்ற நாளிலிருந்து சுமார் 12 முதல் 16 நாட்கள் வரை ஆகலாம்.

கருவணவகங்களில் கருவுறத்தகுதியான பல ஆயிரம் சினை முட்டைகள் இருந்த போதிலும், ஒரு மாதத்தில் ஒரேயொரு சினை முட்டை மட்டும் முதிர்வது மிக ஆச்சரியமான விஷயமாகும். மேலும், பெண் கர்ப்பமுற்றிருக்கும் காலங்களில் சினை முட்டை முதிர்வடைவதில்லை. ஒரு மாதத்திற்கு ஒரு சினை முட்டை மட்டுமே முதிர்ந்து வெளியேற வேண்டும் எனவும், கருவுற்ற காலங்களில் முதிர்வடையக் கூடாது எனவும் ஆணைகள் பிறப்பித்தது யார்?.

ஒவ்வொரு பொருளையும் கணக்கிட்டுப்படைத்துள்ள அகிலத்தின் அதிபதியான அல்லாஹ்தான் என்ற பதில் பின் வரும் வசனத்தில் ஒலிக்கிறது.

(إِنَّا كُلَّ شَيْءٍ خَلَقْنَاهُ بِقَدَرٍ) (القمر:49)

ஒவ்வொரு பொருளையும் கணக்கிட்டு நாம் படைத்துள்ளோம். - அல் குர்ஆன்: 54:49

முதிர்ச்சியடைந்த சினைமுட்டை, கருவணக (அந்தப்புற)த்திலிருந்து மஹாராணி போன்று வெளியேறும் போது, அதனை உரிய இடத்தில் பாதுகாப்புடன் சேர்த்து வைப்பதற்காக மிக நுண்ணிய அளவிலான செல்கள் கொண்ட ஒரு இராணுவப் படை அதனைச் சூழ்ந்து கொண்டு வெளியேறும். இந்த நுண்ணிய செல்கள் மஹாராணியின் தலையில் உள்ள கிரீடம் போன்று காட்சி தரும். இது Corona Radiata என்று கூறப்படுகிறது. மஹாரானியான இந்தச் சினை முட்டையை பாதுகாப்பாக உரிய இடம் (ஃபிலோப்பின் டியூப்) வரை சேர்த்து வைப்பது இந்த இராணுவ வீரர்களின் கடமையாகும். அந்த இடத்தை சினை முட்டை அடைந்ததும், இந்த வீரர்கள் தங்களது பொறுப்பினை கடமையுணர்வுடன் செய்து விட்ட திருப்தியில் பிரியா விடைபெற்று திரும்பி விடுகிறது.

சினை முட்டை வெளியேறுவதை எதிர் நோக்கி காத்துக் கொண்டிருக்கும் ஃபிலோப்பின் டியூப்பின் (கருக்குழல்) நுனியில் அசைந்து கொண்டே இருக்கும் விரல் அமைப்புகள் அந்த சினைமுட்டையை தன்பக்கம் ஈர்த்துக் கருக் குழலின் உட்புறம் செலுத்துகிறது.

மிகப்பெரும் அமானிதமான சினை முட்டையை உள்வாங்கிய கருக்குழல், அதனை மலர் தூவி வரவேற்பது போல், ஒரு வகை வழவழப்பான திரவத்தை சினை முட்டை செல்லும் பாதையில் சுரக்கச் செய்கிறது.

கருக்குழலின் நுனியில் காணப்படும் விரல் அமைப்புகள் தொடர்ந்து அசைந்து கொண்டே இருப்பதால் இந்த திரவத்தில் ஏற்படும் சிற்றலைகள், சினை முட்டை கருப்பையை நோக்கிச் செல்வதற்கு துணைபுரிகின்றன. மெதுவாக அசைந்து ஆடி அன்ன நடை போட்டு கருப்பையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் சினை முட்டை, கருக்குழலின் மூன்றின் ஒரு பகுதி தூரத்தை அடைந்ததும், அங்கேயே தங்கி, தனது துணையான விந்தணுவின் வருகையை வழி மேல் விழி வைத்து காத்துக் கொண்டிருக்கும்.

ஆபத்துகள் நிறைந்த தடைகளை எல்லாம் கடந்து

பலத்த பாதுகாப்புடன், தனது இலக்கை சென்றடைந்த சினை முட்டை, சென்றடைந்த நிமிடத்திலிருந்து சுமார் 24 மணி நேரத்திற்கு மேல் உயிர்வாழ முடியாது. மேலும், முதல் 6 மணி நேரம் நன்கு வீரியத்துடன் இருக்கும். அப்போது கருவுறுவதற்கான வாய்ப்புகளும் பிரகாசமாக இருக்கும். நேரம் செல்லச் செல்ல அதன் வீரியம் குன்றி, கருவுறும் வாய்ப்புகளும் குறைந்து கொண்டே வரும். இதனையெல்லாம் மனதில் கொண்டு, இந்த முயற்சி வீணாகி விடாமல் பயன் தரும் வகையில் அமைந்திட, சினை முட்டையை முதிர்வடையச் செய்த சிறிய பையானது ஒரு வகையான ஹார்மோன் திரவத்தை சினை முட்டை சென்ற திசையை நோக்கி சுரக்கச் செய்கிறது. இந்த ஹார்மோன், ஆண் துணையைத் தேடும் ஆசையை பெண்ணிடத்தில் அதிகப்படுத்துகிறது. இந்த சந்தர்ப்பத்தில் விந்தணுவின் சந்திப்பு கிடைத்து விட்டால் அப்பெண் கருவுறும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

சினை முட்டை கருவுற்றதும், அதனை முதிர்வடையச் செய்த பையானது, மஞ்சள் நிறமுள்ள ஒரு வகை ஹார்மோனால் நிரம்பி விடுகிறது. இது லியூட்டியல் ஹார்மோன் (Leiteal Harmone) எனப்படும். கருவுற்றிருக்கும் காலங்களில் வேறொரு சினை முட்டை முதிர்வதை தடை செய்யும் இந்த ஹார்மோன், கருவுற்ற சினை முட்டையை எதிர்கொள்வதற்கான ஆயத்தங்களை செய்து கொள்ளும் படி கர்ப்பபைக்கு இரகசியச் செய்தியையும் அனுப்பி உஷார்ப்படுத்துகிறது.

### பாதுகாப்பு வளையம்:

குறிப்பிட்ட இலக்கினை அடைந்த விட்ட சினை முட்டை, தன்னைச் சுற்றிலும் ஒரு வகையான மெல்லிய திரையை ஏற்படுத்திக் கொண்டு, அதற்கான வட்ட பாதையில் சுழன்று கொண்டே இருக்கும். அந்த சுழற்சியின் போது காந்த அலைகள் சினை முட்டையிலிருந்து வெளிப்படுகின்றன. இது, விந்தணுவிற்கு சினை முட்டையிருக்கும் இடத்தை அறிவிக்கும் முகமாக இறைவன் ஏற்படுத்திய ஒரு சிறப்பு ஏற்பாடாகும்.

இந்நிலையில் 46 குரோமோசோம்களை கொண்டுள்ள சினை முட்டை, ஏற்கனவே, 23-23 என இரண்டாக பிரிந்து, விந்தணுவில் உள்ள குரோமோசோம்களுடன் இணைவதற்கு தயார் நிலையில் இருக்கும்.

சினை முட்டையானது, குறிப்பிட்ட இலக்கினை அடைய வில்லை என்றாலோ, அல்லது அதை கடந்து சென்று விட்டாலோ, இந்த இரு நிலையிலும் உருவாகும் கரு நிலைத்து நிற்பதில்லை (Ectopic Pregnancy) மாறாக, சில சிக்கல்கள் ஏற்பட்டு அக்கரு கலைந்து மாதவிடாயுடன் வெளியேறிவிடுகிறது. ஓவரியிலிருந்து முதிர்ந்து வெளியேறிய இந்த சினை முட்டை மிகக் கச்சிதமாக ஃபிலோப்பின் டியூப்புக்குள் சென்று விடுகிறது. ஒரு 10 சதவீதம் மட்டுமே தவற வாய்ப்புள்ளது என்று பல ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப் பட்டுள்ளது.

### மாதவிடாயின் போது கரு தரிக்குமா?

மாதவிடாயின் போது குழந்தை உருவாக வாய்ப்புள்ளது, அவ்வாறு உருவாகும் குழந்தை, தீயகுணங்கள் கொண்டதாக, பாவியாக இருக்கும். எனவே, மாதவிடாயின் போது உடலுறவு கொள்வது தடை செய்யப்பட்டுள்ளது என தவறான கருத்துகளை சிலர் பரப்பியுள்ளனர். இதனை உறுதிபடுத்தும் முகமாக சில கதைகளையும் கட்டி விட்டுள்ளார்கள்.

இது அறிவியல் உண்மைக்கும், குர்ஆனின் கருத்துக்கும் முற்றிலும் முரண்பட்டதாகும். மாதவிடாய் நின்ற சுமார் 12 நாட்களுக்குப் பிறகே சினை முட்டை முதிர்வடைகிறது, மேலும் முதிர்வடைந்த நிமிடம் முதல் 24 மணி நேரத்திற்குள் கருவுற வில்லையெனில், சினை முட்டை செத்து விடும் என்று அறிவியல் ஆய்வு கூறுகிறது. அப்படியானால், மாதவிடாயின் போது கரு எவ்வாறு உருவாகும்?. சினை முட்டை இல்லாமலேயே கரு உருவாகும் என வாதிப்பது அறியாமையாகும்.

மாதவிடாயின் போது ஏன் உடலுறவு கூடாது எனக் கூறும் குர்ஆன் வசனத்தின் தொடரிலேயே ஏன் கூடாது என்பதற்கான காரணத்தையும் சேர்த்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது, மாதவிடாயின் போது பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி, பலவீன நிலைக்கு தள்ளப்படுகிறாள் பெண். இந்நிலையில் அவளுடன் உடலுறவு கொள்வதால் மேலும் அவள் பலஹீனமடைந்து, பல்வேறு சிரமங்களுக்கும், அளவு கடந்த துன்பங்களுக்கும் ஆளாக நேரிடும்.

மாதவிடாய் பற்றி உம்மிடம் கேட்கின்றனர். அது ஒரு அசௌகரியமாகும். எனவே, மாதவிடாயின் போது பெண்களை விட்டும் (உடலுறவு கொள்ளாமல்) விலகிக் கொள்ளுங்கள். அவர்கள் தூய்மை யாகும் வரை அவர்களை நெருங்காதீர்கள் (2:222) என்ற தடை வந்துள்ளதே தவிர, இவர்கள் கருதுவது போல், துற்குணம் கொண்ட குழந்தை உருவாகும் என்பதற்காக அல்ல.

அறிவியல் உண்மைகளுக்கும், குர்ஆன் கூறும் சத்தியத்திற்கும் எதிராக உள்ள கருத்துகளை நம்பும் மக்கள் இருக்கும் வரை இது போன்ற இஸ்லாத்தின் பெயரால் மூடக்கருத்துகள் கூறுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

### குழந்தை பாக்கியம் வேண்டுமா?

குழந்தை பாக்கியம் இன்றி வேதனைப்படுவோர், இறைவன் ஏற்படுத்தியுள்ள இந்த சூட்சமங்களைப் புரிந்து கொண்டு, இது போன்ற வாய்ப்புகளை சரியாகப் பயன்படுத்திக் கொண்டால், அல்லாஹ்வின் நாட்டப்படி அவர்களுக்கு குழந்தைப்பாக்கியம் கிடைக்கும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

விளம்பரங்களில் அறிமுகமாகும் போலி மருத்துவர்களிடம் சென்று காசு பணங்களை பறி கொடுத்து விட்டு ஏமாற வேண்டிய அவசியமும் ஏற்படாது.

போலி மருத்துவர்களை அணுகினால், அனாவசியமாக பரிசோதனை என்ற பெயரில் உங்களிடமிருந்து பணம் காசுகளை அதிகமாகப் பறித்துக் கொள்வதுடன், பல்வேறு சிரமங்களுக்கும் உங்களை ஆளாக்கி விடுகிறார்கள். எனவே, விளம்பரங்களைக் கண்டு ஏமாற்றம் அடைந்து விடாமல், உண்மையில் உடல் ஆரோக்கியத்தில் குறையுள்ள சகோதரர்கள் உரிய மருத்துவர்களை அணுகுங்கள். அவர்கள் சரியான மருத்துவம் செய்வதுடன் உங்களுக்கு சிறந்த ஆலோசனைகளையும்

வழங்குவார்கள்.

வேறு சிலர், குழந்தை வேண்டி தர்ஹாக்களுக்குச் சென்று பல்வேறு நேர்ச்சைகளை முன்வைத்து தவமிருக்கிறார்கள். மார்க்க அறிஞராகத் தன்னைக் கருதிக் கொள்பவர்களில் சிலரும் தர்ஹா பைத்தியம் பிடித்து அலைகிறார்கள். தானும் கெட்டு, பிறரையும் கெடுத்து வரும் இந்த அறிஞர்கள்?, செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விட்டார்கள். அங்கே அடக்கப்பட்டிருக்கும் மனிதரிடம் குழந்தை வேண்டி பிரார்த்தனை செய்வதற்கு மக்களை ஆர்வப்படுத்துகிறார்கள்.

சில முஸ்லிம்கள் கோயில், குளம், மந்திரவாதி, ஜோசியக்காரர் என சுற்றி வருகிறார்கள். இவ்வாறு மக்கள் அலைந்து கொண்டிருப்பதற்கும் இந்த சில மார்க்க அறிஞர்கள்தான்? அடிப்படைக் காரணமாக விளங்குகிறார்கள்.

அல்லாஹ் படைக்க நாடியதை தடுக்கவோ, அவன் படைக்க மறுத்ததை கொடுக்கவோ இவ்வுலகில் யாருக்கும் சக்தி இல்லை அவன் நாடியவர்களுக்கு குழந்தையைக் கொடுக்கிறான் நாடியவர்களை மலடாக ஆக்குகிறான் மேலும், இறைவன் நாடினால், பருவம் கடந்ததற்குப் பிறகும் ஒருவருக்கு குழந்தை கொடுக்க சக்தி பெற்றவன் அவனிடம் மட்டுமே குழந்தை வேண்டி பிரார்த்தனை செய்ய வேண்டும், அவனைத்தவிர வேறு யாரிடமும் குழந்தை வரம் வேண்டல் கூடாது என்ற உண்மைகளைப் பொது மக்களுக்கு புரிய வைக்கத் தவறிவிட்டார்கள் இந்த மார்க்க அறிஞர்கள்.

இறைத்தூதர்களான இப்றாஹீம்(அலை) அவர்களும், ஜகரிய்யா(அலை) அவர்களும் குழந்தை இன்றி வருந்திக் கொண்டிருந்த நிலையில், குழந்தை வேண்டி இறைவனைத் தவிர வேறு யாரிடமும் பிரார்த்தனை செய்ய வில்லை. குழந்தை பெற்றுக் கொள்ளும் பருவ வயதினை கடந்த பிறகும் அவர்கள், இறைவன் மீது ஆழமான நம்பிக்கை கொண்டு, பிரார்த்தனை செய்தார்கள். இறைவனும் அவர்களது பிரார்த்தனைகளை அங்கீகரித்து, அவர்களுக்கு சாலிஹான குழந்தைகளை வழங்கினான்.

எனவே, அன்பு வாசகர்களே! இந்த உண்மைகளை நன்கு புரிந்து கொண்டு, அல்லாஹ்விடம் மட்டுமே பிரார்த்தனை செய்து கொண்டு, மாதவிடாய் நின்ற 12 முதல் 16 வரை உள்ள நாட்களில் சினை முட்டை முதிர்வதை மனதில் கொண்டு அந்த நாட்களில் மறக்கமால் இல்லறத்தில் ஈடுபடுங்கள் (Intercourse). அப்போது குழந்தை உருவாகும் வாய்ப்பு பிரகாசமாக இருக்கும். அல்லாஹ் நம் அனைவருக்கும் சாலிஹான குழந்தைகளை வழங்குவானாக!

# பரிசை வென்றவர்கள் விபரம்

ஹிஜ்ரி 1430 வருடம், சுவனப்பாதை மாத இதழ் நடத்திய உலகளாவிய எழுத்துப் புரட்சிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு, வெற்றி பெற்றவர்களுக்கு துல்ஃஃதா பிறை 18 அன்று செனாயிய்யா இஸ்லாமிய அழைப்பகத்தில் பரிசளிப்பு நிகழ்ச்சி மூலம் பரிசுகள் வழங்கப்பட்டது

**முதல் பரிசு** - சவூதி ரியால் 700 மதிப்புள்ள பொருள்கள்.

**பரிசு பெற்றவர்: M. அன்வர்தீன்** - கப்ஜி - சவூதி அரேபியா. தலைப்பு: கிரிக்கெட்

**இரண்டாம் பரிசு** - சவூதி ரியால் 500 மதிப்புள்ள பொருள்கள்.

**பரிசு பெற்றவர்: ஸபியா N. ஜமான்**, அல்ருவைஸ், சவூதி அரேபியா. தலைப்பு: டென்ஷன் ஆவது ஏன்?

**மூன்றாம் பரிசு** - சவூதி ரியால் 300 மதிப்புள்ள பொருள்கள்.

**பரிசு பெற்றவர்: திருமதி A. ஷம்சாத்**, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு. தலைப்பு: கொடுப்பதும். எடுப்பதும் (மஹர், வரதட்சணை).

மற்றும் முறையே 13 ஆறுதல் பரிசுகளை தட்டி சென்றவர்கள்:

**பரிசு பெற்றவர்கள்:**

1. **முஹம்மது ஃபைரோஸ் கான்** - அபுதாபி (நெல்லிக்குப்பம்). தலைப்பு: பிரிவுகளுக்கு மத்தியில் அழைப்பு பணி.

2. **அ. முஹம்மது அமீன்** - அபுதாபி. தலைப்பு: அரசியலில் முஸ்லீம்கள் ஓரங்கட்டப்படுவதேன்.

3. **ஷகிலா ஃபெரோஸ்** - அபுதாபி (நெல்லிக்குப்பம்). தலைப்பு: இரண்டாம் திருமணத்தை பெண்கள் எதிர்ப்பதேன்?

4. **H. ஜஹபர் நாச்சியா** - அடியக்கமங்கலம், தமிழ்நாடு. தலைப்பு: நபி(ஸல்) அவர்கள் உலகத்திற்கோர் முன்மாதிரி.

5. **உம்மு ஆனிஷா** - ஜித்தா, சவூதி அரேபியா. தலைப்பு: டென்ஷன் ஆவது ஏன்?

6. **ஹஜ்ஜா சபியா கரீம்** MA.,BSc., B Ed- மலேசியா. தலைப்பு: கருப்பை சுதந்திரம் பெண்ணுரிமையா?

7. **முஹம்மது பைரோஸ்கான்** - கூத்தாநல்லூர், தமிழ்நாடு. தலைப்பு: பொறுமையின் அவசியம்.

8. **A.M.B. பைஜீர் ஹாதி** - நீடுர், தமிழ்நாடு. தலைப்பு: நபி(ஸல்) அவர்களின் இறுதி பேருரை.

9. **அப்துல் ஜப்பார் பாத்திமா பர்ஜானா**, மடவலா, இலங்கை. தலைப்பு: நீங்களும் நல்ல மனைவியா?

10. **முஹம்மது ஃபைரோஸ் கான்** - அபுதாபி (நெல்லிக்குப்பம்). தலைப்பு: குர்ஆன் இறக்கப்பட்டதின் நோக்கம்.

11. **ஷேக் சிந்தா மதார்** - துபாய். தலைப்பு: பெரும்பாலான தமிழக முஸ்லிம்கள் வெளிநாட்டு வாழ்க்கையை தேர்ந்தெடுப்பதேன்.

12. **உம்மு வஸீம்** - ஜித்தா, சவூதி அரேபியா. தலைப்பு: குடும்பவியலும், நபி(ஸல்) அவர்களும்.

13. **ரியாஸ் அஹமது** - தமாம், சவூதி அரேபியா. தலைப்பு: வெளிநாட்டு வாழ்க்கை சாதகமும், பாதகமும்.

# அறிவு மற்றும் பரிசுப் போட்டி - 6:3

போட்டிக்குரிய கேள்விகள்

1. மனிதர்களே! ஓர் உதாரணம் சொல்லப்படுகிறது. நிச்சயமாக அல்லாஹ்வையன்றி (வேறு) எவர்களை நீங்கள் பிரார்த்திக்கின்றீர்களோ, அவர்களெல்லாம் ஒன்று சேர்ந்தாலும் ஓர் ---------- கூடப் படைக்க முடியாது என்று அல்லாஹ் 22:73 கூறுகின்றான் அது யாது?

a) கொசு b) தேனீ c) ஈ

2. அரஃபா நோன்பிற்குரிய கூலி.

a) சென்ற வருட பாவங்களுக்கு பரிகாரம்.

b) எதிர் வரும் பாவங்களுக்கு பரிகாரம்.

c) முன் சென்ற, பின்வரும் வருடத்தின் பாவங்களுக்கு பரிகாரம்.

3. எவர்கள் தவ்றாத் (வேதம்) சுமத்தப் பெற்று பின்னர் அதன்படி நடக்கவில்லையோ, அவர்களுக்கு உதாரணமாக தன் திருமறையில் எதனை குறிப்பிடுகிறான்

a) ஏடுகளை சுமக்கும் குதிரை

b) ஏடுகளை சுமக்கும் ஒட்டகம்

c) ஏடுகளை சுமக்கும் கழுதை

4. 14:26 வசனத்தில் (இணை வைப்போரின்) கெட்ட வாக்கியத்திற்கு உதாரணமாக எதனை குறிப்பிடுகிறான்?

a) நல்ல மரம் b) கெட்ட மரம்

c) இலந்தை மரம்

5. 14:24 வசனத்தில் நல்வாக்கியத்திற்கு அல்லாஹ் எவ்வாறு உதாரணம் கூறுகிறான்?

a) கெட்ட மரம் b) நல்ல மரம்

c) பேரித்த மரம்

அறிவுப் போட்டி - 6:2 க்கான பரிசு பெறுபவர் : M. ரமீஸ் 0563431780

*பரிசுக்குரியவர், மௌலவி இப்ராஹீம் அவர்களைத் தொடர்பு கொண்டு தனது பரிசை பெற்றுக்கொள்ளவும் (0506625229)*

விதிமுறைகள்

1. உங்களுடைய விடைகளை குறுந்தகவல் (SMS) மூலமாகவும் அனுப்பலாம். கொடுக்கப்பட்டுள்ள ஐந்து கேள்விகளுக்கான பதிலை கீழ்கண்ட வடிவத்தில் அனுப்பவும்.

2. உங்கள் பெயர், அறிவுப் போட்டி எண் (AP No.), விடை (ANS:), பதில்கள் வரிசைப்பிரகாரம் அமைந்திருக்க வேண்டும். உதாரணமாக

   Abdullah, AP 4:6, ANS: 1a, 2b, 3d, 4b, 5c. என்கிற வகையில் குறுந்தகவல் (SMS) அமைந்திருக்க வேண்டும்.

3. விடைகளை 0506096740 என்கிற எண்ணுக்கு குறுந்தகவல் (SMS) மூலமாகவோ அல்லது suvanam@gmail.com என்கிற மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ அனுப்பலாம். கடிதம் மூலம் அனுப்ப விரும்புவோர் விடைத்தாளை உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில் (புதியது) நேரடியாகக் கொடுக்க வேண்டும்.

4. விடைகளை பிரதிமாதம் பிறை 25ஆம் தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.

5. பரிசு பெற்றவர் மற்றும் சரியான விடைகள் அடுத்த மாத இதழில் வெளிவரும்.

6. அதிகபட்ச மதிப்பெண்களை ஒன்றுக்கு மேற்பட்டோர் பெற்றிருந்தால் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்படுவார்.

7. ஆசிரியர் முடிவே இறுதியானது.

## அறிவுப் போட்டி - 6:2 க்கான விடைகள்

1) c) காஃபிர்கள்

2) a) இவ்வுலக வாழ்க்கைக்கு

3) c) நாய்

4) a) ஆதம்(அலை)

5) b) கொசு

# ~~~~ இறை நினைவுகள் ~~~~

தொடர் - 31 - *மௌலவி K.L.M. இப்ராஹீம் மதனி M.A.*

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكُفْرِ وَالْفَقْرِ، اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ، لاَ إِلَهَ إِلاَّ أَنْتَ، (أبوداود)

யா அல்லாஹ்! இறைநிராகரிப்பை விட்டும் வறுமையை விட்டும் நான் உன்னிடம் தான் பாதுகாவல் தேடுகின்றேன். யா அல்லாஹ்! மண்ணறையின் வேதனையை விட்டும் நான் உன்னிடம் தான் பாதுகாவல் தேடுகின்றேன். வணக்கத்திற்குரிய இறைவன் உன்னைத்தவிர வேறு யாருமில்லை.

اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَدَنِيْ، اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ سَمْعِيْ، اَللّٰهُمَّ عَافِنِيْ فِيْ بَصَرِيْ،لاَ اِلَهَ إِلاَّ أَنْتَ. (أبوداود)

யாஅல்லாஹ்! எனது உடலில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! எனது செவிப்புலனில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! எனது பார்வையில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! வணக்கத்திற்குரிய இறைவன் உன்னைத் தவிர வேறு யாருமில்லை. (அபூதாவூத்)